செ.வெ.எண்: 215 நாள்: 16.03.2020

**வேளாண்மைப் பொறியியல் துறையில் உதவி துளைஞர் பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள்**

---

புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மைப் பொறியியல் துறையில் உதவி துளைஞர் பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில், வேளாண்மைப் பொறியியல் துறையில் காலியாக உள்ள உதவி துளைஞர் ஒரு பணியிடம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது தற்காலிக அடிப்படையில் நேரடியாக நியமனம் செய்யும் வகையில் பூர்த்தி செய்திட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே, தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் 26.03.2020 மாலை 5.30 மணிக்குள் தங்களின் மார்பளவு புகைப்படத்துடன் கூடிய சுயவிவரங்களுடன் தங்களின் கல்வித் தகுதி, இனம் ஆகியவற்றிக்கான சான்றுகளின் சான்றோப்பம் பெறப்பட்ட ஜெராக்ஸ் நகலுடன் ரு. 10 அஞ்சல் தலை ஒட்டிய சுயமுகவரியிட்ட உறையுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் இப்பதவிக்கான குறைந்த பட்ச கல்வித் தகுதி அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையத்திலிருந்து கம்மியர் (டீசல்) அல்லது கம்மியர் (மோட்டார் வாகனம்) பயிற்சி முடித்த சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் மற்றும் சம்மந்தப்பட்ட தொழிற்பிரிவில் இரண்டாண்டுகள் புகழ்பெற்ற பணிமனையில் (அனுபவம்) பயிற்சி முடித்திருக்க வேண்டும் அல்லது இயந்திரவியல் துறையில் மூன்றாண்டு பட்டயம் முடித்திருக்க வேண்டும் மற்றும் வேளாண்மை துறையில் விசை துளை பிரிவில் நான்கு மாதங்கள் பயிற்சி முடிந்திருக்க வேண்டும்.

தமிழில் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும். 01.01.2020 அன்று குறைந்தபட்சம் 18 வயது நிறைவடைந்தவராகவும் அதிகபட்ச வயது வரம்பு 35 வயதுடையவராகவும் இருக்க வேண்டும். விண்ணப்பங்கள் செயற்பொறியாளர் (வே.பொ), செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகம், 1426 சி பண்டகசாலை வளாகம், திருச்சிராப்பள்ளி ரோடு, திருக்கோகர்ணம், புதுக்கோட்டை 622002 என்ற முகவரிக்கு அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**